# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN : 2278 - 7550


UGC - பல்கலைக்கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

UGC RECOGNIZED JOURNAL

UGC NO : 42330 / IMFACT FACTOR : 4.118

அக்டோபர் - 2018

21


visit us: www.pallavipathippakam.in

https://ayidhaezhuthu.in

# ஆய்த எழுத்து

பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்

# AYIDHA EZHUTHU

INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES

**ISSN : 2278-7550**

UGC - பல்கலைக் கழக மானியக் குழுவின் அங்கீகாரம் பெற்றது

UCG RECOGNIZED JOURNAL

UGC NO : 42330 / IMFACT FACTOR : 4.118

மலர் : 6 அக்டோபர்-2018 இதழ் : 10



பதிப்பாசிரியர்

நல். நடராசன்

தமிழியல் ஆய்வு மையம், ஈரோடு.

0424-2251545, 94422 51549
82489 54308, 63817 01339

பல்லவி பதிப்பகம்

118, மேட்டூர் சாலை,
கல்யாண் சில்க்ஸ் எதிரில்,
ஈரோடு - 638011.

pallavipublications@gmail.com
ayidhaezhuthu@gmail.com



**EDITORIAL BOARD**

**Dr.C.Thiyagarajan**
*Tamil University, Thanjavur.*
mcthiyagu@gamil.com

**Dr.K.Ramesh**
*Thiruvalluvar University, Vellore.*
grameshtu@gamil.com

**Dr.P.Sathyamoorthy**
*Madurai Kamarajar University, Madurai.*
mkutamil2010@gamil.com

**Dr.P.Jayakrishnan**
*Kerala University, Thiruvanandapuram.*
pjktamil@gmail.com

**Dr.K.Sankaranarayanan**
*Chennai University, Chennai.*
krksankaraatamil@gamil.com

**Dr.Alibhava**
*Bharathidasan University, Trichy.*
alibavapkm@gamil.com

**Dr.S.Aranganathan**
*Tamil Nadu Open University, Chennai.*
arangantnou@gamil.com

**ஆசிரியர் குழு**

முனைவர் சி.தியாகராசன்
*தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.*
mcthiyagu@gamil.com

முனைவர் க.இரமேஷ்
*திருவள்ளுவர் பல்கலைக்கழகம், வேலூர்.*
grameshtu@gamil.com

முனைவர் போ.சத்தியமூர்த்தி
*மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை.*
mkutamil2010@gamil.com

முனைவர் ப.ஜெயகிருஷ்ணன்
*கேரளா பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.*
pjktamil@gmail.com

முனைவர் கி.சங்கரநாராயணன்
*சென்னைப் பல்கலைக்கழகம், சென்னை.*
krksankaraatamil@gamil.com

முனைவர் உ.அலிபாவா
*பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சி.*
alibavapkm@gamil.com

முனைவர் சு.அரங்கநாதன்
*தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை.*
arangantnou@gamil.com

# பொருளடக்கம்


1. திரிகடுகத்தில் வாழ்வியல் சிந்தனைகள்

*முனைவர் க.சகாய கிரேஸி - 1

2. நாலடியார் காட்டும் வாழ்வியல்

*முனைவர் அ.ஜான்சிமேரி - 4

3. குறுந்தொகை காட்டும் முல்லைத் தலைவி

*முனைவர் செள.ஜான்சிராணி - 7

4. சங்க இலக்கியங்கள் கட்டும் இறப்புகுறித்த வாழ்வியல் நிகழ்வுகள்

*முனைவர் ஜெ.அருள் இருதய ஜெயந்தி - 10

5. திருக்குறள் காட்டும் மனித மாண்புகள்

*முனைவர் தே.ராஜசீலி - 13

6. இயேசு காவியத்தில் வாழ்வியல் கூறுகள்

*அருட்சகோதரி முனைவர் இ.அல்போன்சாள் - 15

7. தமிழ் இலக்கியங்களில் வாழ்வியல் சிந்தனைகள்

*அ.கிருத்திகா - 18

8. சங்க இலக்கியத்தில் விருந்தோம்பல்

*முனைவர் ம.தனலட்சுமி - 20

9. இனக்குழு மக்களின் வாழ்வியல் சிந்தனையில்
வேட்டையாடுதலும் - பாதீடும்

*முனைவர் க.குமரகுருபரன் - 22

10. இலக்கியங்களில் அறச்சிந்தனைகள்

*முனைவர் மா.பாப்பா - 26

11. இலக்கியங்கள் உணர்த்தும் வாழ்வியல் நெறிகள்

*முனைவர் செ.ரெஜினா - 29

12. பெண் எனும் பெருந்தெய்வம் – வள்ளலார் பாரதி ஒப்பீடு

*முனைவர் நா.பா.மஞ்சுளா - 32

13. நாலடியார் நவிலும் இல்லற விழுமியங்கள்

*முனைவர் பெ.சுபாசினி - 35

14. இல்லாள் கட்டமைப்பு :
நான்மணிக்கடிகையை முன்வைத்த ஆய்வு

*அ.இளவரசி - 38

15. சங்க இலக்கியங்களும் தமிழ்ச்சமூகம் சார் வாழ்வியல் நெறிகளும்

*சோ.இலக்கியா - 41

# இலக்கியங்களில் அறச்சிந்தனைகள்

*முனைவர் மா.பாப்பா, உதவிப் பேராசிரியர், பாத்திமா கல்லூரி (தன்னாட்சி), மதுரை.

**முன்னுரை**

அறம் என்றால் நல்ல செயல்களின் தொகுப்பு அல்லது தொகுதி என்பது பொருள். சமுதாயம் நலம் பெற, மனதை சீரமை செய்ய, பெரியோர்களின் நற்கருத்துக்களை ஏற்றல் என்று சங்கச் சான்றோர்கள் நிறைவான அறச் சிந்தனைகளை வழங்கியிருக்கின்றனர். அணியிலக்கணத்தில் முப்பத்தைந்திற்கும் தாய் அணியாகத் திகழ்வது உவமையணி என்பது போல, நீதி இலக்கியங்களில் தாயாகத் திகழ்வது சங்க இலக்கியங்கள் ஆகும். இவ்விலக்கியங்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் ஐந்திணைகளில் அகம், புறம் என்னும் பிரிவுகளில் பாடப்பட்டிருக்கின்றன. வாழ்வில் அகத்தையும் புறத்தையும் கண்ணெனப் போற்றிய தமிழர்கள், அறக்கோட்பாடுகளையும் வாழ்வில் உயிராக மதித்தனர். அறமே வாழ்வாக அமைந்தது. பிறருக்குத் துன்பம் கொடுக்காத நல்வாழ்வைத் தமிழ் மக்கள் வாழ்ந்திருக்கின்றனர். வாழ்வில் ஏற்றத்தாழ்வு பார்க்காமல் வாழ்வதால் தன்னிலை அடையலாம் என கணியன் பூங்குன்றனார் உணர்த்தியிருக்கின்றார்.

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்"**

எல்லா ஊரும் நமது, எல்லா மக்களும் நமது என்கின்றார். மனிதர்களாகிய நாம் தனித்து வாழ்வதில்லை, மாறாக ஒரு சமுதாயமாக வாழ்கின்றோம். நம் வாழ்வில் புதுப்புதுக் கேள்விகள், சவால்கள், சந்தேகங்கள், எதிர்பார்ப்புகள் என இப்படிப்பட்ட வாழ்வை எதிர்கொள்ள சங்க இலக்கியங்கள் முன்வைக்கும் அறநெறிகள் மானுட வாழ்வின் மேன்மைக்கு மிகவும் இன்றியமையாதவையாகும்.

***மனிதப் பண்பும் - பொது வாழ்வும்***

தொல்காப்பியத்தை அடுத்து சங்ககால இலக்கியங்களாக நமக்குக் கிடைக்கப் பெறுபவை பத்துப்பாட்டு எட்டுத்தொகையும், அகமெனும் இல்லற வாழ்வின் ஒவ்வொரு நிலையையும் விளக்குபவை அக நூல்களாகவும், புறச்செயல்களான பொருளீட்டுதல், போர்புரிதல் என்பன பற்றி விளக்குபவை புறம் சார்ந்த நூல்களாகவும் தொகுக்கப் பெற்றுள்ளன. அகவாழ்வின் கடமைகள் பெண்ணுக்கும், புறவாழ்வின் கடமைகள் ஆணுக்கும் வகுக்கப்பட்டுள்ளது.

**"வினையே ஆடவர்க்கு உயிரே வாணுதல்**
**மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்"** (குறுந். 135)

என்கிறது குறுந்தொகை. வாழ்க்கைக்குத் தேவையான பல தத்துவங்களும், வாழ்வியல் அறங்களும் தமிழ் இலக்கியங்களில் செறிந்து கிடக்கின்றன என்பதை,

**"உண்பது நாழி உடுப்பவை இரண்டே"**
**"யாதும் ஊரே யாவரும் கேளிர்"**
**"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"**
**"நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்"**
**"உள்ளம் பெருங்கோயில்"**
**"ஊழ்வினை உருத்துவந் தூட்டும்"**
**"அறிவை விரிவு செய்! அகண்டமாக்கு"**
**"வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்"**
**"அறத்தான் வருவதே இன்பம்"**

என்று பிறப்பு முதல் இறப்பு வரை மனித வாழ்வு மண், நீர், மக்கள் வளம், வாழ்க்கை முறை, வாழ்வின் பயன் என்று பாகுபடுத்திக் கொண்டு, எல்லா மனிதர்களும் சில மாறாத அடிப்படைக் கொள்கைகளை வைத்துக்கொண்டே வாழ்வினைத் தொடங்குகின்றனர். சங்க